[1990 சனவரி 20

[மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை]

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதே நம்முடைய மாநிலத்திலுள்ள கால்நடை மருத்துவக் கல்லூரிகளில் படித்து 200 பட்டதாரிகள் வெளி வந்து கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்கு இப்போது அரசு வேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கின்ற சூழ்நிலையில் இருக்கும்போது மேலும் தனியார்களுக்கு இதுபோன்று கால்நடை மருத்துவக் கல்லூரிகளைத் தொடங்க அனுமதி வழங்கி, மேலும் பட்டதாரிகள் அதிக அளவில் வெளி வந்தால் அவர்களுக்கு அரசு வேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டு,அது மேலும் விபரீதமான விளைவுகளை ஏற்படுத்தும். அப்படி படித்து வருகிறவர்களுக்கு எல்லாம் முழுமையாக பணி பாதுகாப்பு, வேலை வாய்ப்பு போன்ற பல்வேறு பாதுகாப்புகளை ஏற்படுத்திக் கொடுக்க முடியாத சூழ்நிலை அரசுக்கு ஏற்பட்டுவிடும். இந்தக் கால்நடை மருத்துவக் கல்லூரிகளைப் பொறுத்த மட்டிலும் மருத்துவக் கல்லூரிகளிலிருந்து பட்டதாரிகளை அதிக அளவில் ஏற்படுத்துவதை விட விவசாயிகளுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் பயிற்சிகளைக் கொடுத்து கால்நடைகளை வளர்ப்பதற்கு அவர்களுக்கு பயிற்சி கொடுக்கின்ற ஒரு சூழ்நிலையிலே தான் அண்மையிலே 20–9–1989 அன்று நம்முடைய தமிழினத்தினுடைய தலைவர், தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஒரு பல்கலைக் கழகத்தையே துவங்குவதற்கு அனுமதி வழங்கி, அது துவங்கப்பட்டு, செயல்பட்டு வருகிறது. எனவே தனியார்களுக்கு இப்போது கால்நடை மருத்துவக் கல்லூரி அமைப்பதற்கு அனுமதி வழங்குகின்ற திட்டம் முழுமையாக அரசிடம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

10-25 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. விதி 110இன் கீழ் முதலமைச்சரின் அறிக்கை.

இந்து சட்டத்தின கீழ் பரம்பரைச் சொத்தில் பெண்களுக்குத் சம உரிமை வழங்கும் சட்டத் திருத்தத்திற்கு குடியரசுத் தலைவர் ஒப்புதல் அளித்துள்ளது குறித்து

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் 18–1–1990 அன்று இந்த அவையிலே உரையாற்றும்போது இந்து வழிமுறை உரிமை (வாரிசுவுடைமைச்) சட்டத்தின்கீழ் பரம்பரைச்

1990 சனவரி 20] [டாக்டர் மு. கருணாநிதி]

சொத்தில் ஆண்களைப் போன்றே பெண்களுக்கும் சம உரிமை வழங்க விழைகின்ற 1989 ஆம் ஆண்டு இந்து வழிமுறை உரிமை தமிழ்நாடு திருத்தச் சட்ட முன்வடிவுக்கு குடியரசுத் தலைவரின் இசைவை எதிர்நோக்கி இருப்பதாகக் கூறி இருந்தார். இந்த அவையிலே அந்த மசோதா கடந்த ஆண்டு 6–5–1989 அன்று நிறைவேற்றப்பட்டு மைய அரசுக்கு 24–5–1989 அன்று அனுப்பப் பட்டது. அந்தச் சட்ட முன்வடிவுக்கு மேதகு குடியரசுத் தலைவர் அவர்கள் தனது இசைவினை அளித்துள்ளார் என்பதையும் (மேசையைத் தட்டும் ஒலி) அந்தச் சட்ட முன்வடிவு 18–1–1990 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு அரசிதழின் நான்காம் பகுதி, இரண்டாம் பிரிவின் சிறப்பு இதழில் தமிழ்நாடு சட்டம் 1/1990 ஆக வெளியிடப்பட்டுள்ளது என்பதையும் இந்தப் பேரவைக்குத் தெரிவிப்பதில் நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

3. தகவல் கோரல்.

(அ) திருநெல்வேலி — கட்டபொம்மன், சிதம்பரனார், இராமநாதபுரம், காமராசர், மதுரை ஆகிய மாவட்டங்களில் ஏற்பட்ட பெரு வெள்ளத் தையொட்டி அரசு சிறப்பு நிவாரணப் பணிகளை மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து :

திரு. வே. தங்கபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காமராசர் மாவட்டத்தில் அண்மையில் சனவரி மாதம் 7–1–1990லும் அதைத் தொடர்ந்து 3 நாட்களுக்கு மிகப் பெருமளவில் மழை பெய்ததின் காரணமாக பெருத்த சேதாரம் ஏற்பட்டு பல்லாயிரக் கணக்கான விளை நிலங்கள் பாதிக்கப்பட்டு இருக்கிறது. பாதிக்கப்பட்ட அந்தப் பகுதி மக்களுக்கு உடனடி நிவாரணத்திற்காக வேண்டியபோது அரசின் சார்பாக மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதிக்கு வருகை தந்தார்கள். இதிலே சம்பிரதாயத்திற்காக வரலாறு காணாத பெருமழை என்று சொல்வதை விட அரசுக்கு புள்ளி விவரம் மூலம் நான் சொல்ல விரும்புகிறேன். இதே சனவரித் திங்களில் காமராசர் மாவட்டத்தில் அண்மை வருடங்களிலே எந்தக் காலத்திலும் ஒரு மில்லி மீட்டர் மழை கூட பெய்தது கிடையாது. ஆனால் கடந்த 30 ஆண்டுகளில், இந்த ஆண்டுதான் 1,497 மில்லி மீட்டர் மழை அந்தப் பகுதியில் பெய்தது. அதிலும் குறிப்பாக, காரியாப்பட்டியில் மட்டுமே ஒரே நாளில் ஏறக்குறைய 285 மில்லி மீட்டரும், அதையொட்டி இருக்கிற திருச்சுழியிலே ஏறக்குறைய 273 மில்லி மீட்டரும் பெருத்த மழை பெய்தது, அந்தப் பகுதியிலே குண்டாறுகளில் பெரும் வெள்ளம் ஏற்பட்டு பல்லாயிரக் கணக்கான ஏக்கர் நிலங்கள் பாதிக்கப்பட்டு இருக்கிறது. பல நூற்றுக் கணக்கான கிராமங்கள் தீவுகளைப் போல் இருந்தன. சாலைகள் முழுவதும் பழுதடைந்து போய் இருக்கிறது. இந்த மழையின் காரணமாக 7 பேர் அந்தப் பகுதியில் உயிர் இழந்து இருக்கிறார்கள். நூற்றுக் கணக்கான கால்நடைகள் மடிந்து இருக்கின்றன. வெள்ளச்சேதம் எந்த அளவுக்குப் பாதிப்பை ஏற்படுத்தி இருக்கிறது என்று இன்